புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

=================================================================

# ஞானக்கூத்தன் கவிதைகளில் - அங்கதம்

செல்வி.ர.ஆர்த்தி
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர்
உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர்- 43.

முனைவர்.ச.பிரியதர்சினி
நெறியாளர் & உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர்
உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர்; - 43.

=================================================================

ஆய்வச்சுருக்கம்

தமிழ் இலக்கிய மரபில் கவிதை என்ற இலக்கிய வகைமை தனிச்சிறப்புடையது. தொல்காப்பியனார் காலம் தொடங்கி இன்று வரை தமிழில் ஏராளமான கவிதை(செய்யுள்) இலக்கியங்கள் தோன்றியுள்ளன. கவிஞனின் உள்ள உவகையில் உதிப்பது கவிதை. அக்கவிதை அவன் உள்ளம் விளையும் கருத்துக்களைக் கொண்டதாக விளங்க வேண்டும். கவிதை சிறக்கக் கவிஞன் ஒலிநயம், யாப்பமைப்பு, சொல்லாட்சி, அணி போன்ற கூறுகளைப் பயன்படுத்துகிறான். அவற்றின் பயன்பாடு கவிதையை அழகுணர்ச்சி கொள்ளச் செய்வதோடு நிலைத்த தன்மையுடன் விளங்கச் செய்கிறது. படைப்பாளரின் தனித்தன்மையைத் தீர்மானிப்பது அவர்கள் கையாண்டுள்ள உத்திகளைப் பொறுத்தே. அவ்வுத்திகள் கவிஞரின் ஆளுமையையும் கருத்துக்களையும் வாசகனிடம் கொண்டு செல்கின்றன. இவ்வகையில் நடுநிலை தவறாமல், சமுதாய நிகழ்வுகளைத் தம் கவிதைகளில் பாடுவதில் சிறந்தவர் ஞானக்கூத்தன். இவரின் கவிதைகளில் அழகியலுக்கும், உத்திக்கும் பஞ்சமில்லை. இவரின் கவிதைகளில் உத்திகள் பரந்து கிடக்கிறது. பல துறைகளிலும் பல இடங்களிலும் நடக்கும் தவறுகளைச் சுட்டிக்காட்டுவதோடு அல்லாமல் அவை மாற வேண்டும் என்ற அக்கறை உடையவராகவும் இருக்கிறார். எனவே இவரது படைப்புகளில் அங்கத உத்தி மிகுதியாகக் கையாளப்பட்டுள்ளது. கவிஞர் ஞானக்கூத்தனின் அங்கதக் கவிதைகளை ஆய்வது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

திறவுச் சொற்கள்

அங்கதம் - அரசாங்கம் - குழந்தைப்பருவம் - மூடநம்பிக்கை– அரசியல்

## முன்னுரை

கவிதையை கவிதையாக்குவது வரலாறல்ல, சமுதாயமல்ல, யாப்பு அல்ல, ஓட்டம் அல்ல, இவற்றிற்கும் மேலாக ஓர் இயக்கு சக்தி இதனை இயக்குவிக்கின்றது. உயிரின் இயக்கத்தை உடலைக் கொண்டுதான் உணர்த்த முடியும். கவிதையின் இயக்கத்தை அதில் வாழும் உத்திகளைக் கொண்டு தான் உணர முடியும். இவ்வுத்திகளின் பணியானது கவிதை இயக்கத்திற்கு மிகவும் இன்றியமையாததாக அமைகிறது. படைப்பாளரின் படைப்பு ஆளுமைத் திறனை வெளிப்படுத்தவும், வாசகனின் நுகர்வுக் களத்தை மேம்படுத்தவும் படைப்பானது வளர் நிலை நோக்கிச் செயல்படவும் உத்திகளின் தேவை அவசியமாகிறது. அந்த வகையில் கவிஞர் ஞானக்கூத்தனின் கவிதைகளில் அங்கத உத்தி எவ்வாறு பிரதிபலிக்கிறது என்பதை பற்றி ஆய்கிறது இக்கட்டுரை.

## புதுக்கவிதையின் உத்திகள்

மனிதனுக்காக படைக்கப்பட்ட அற்புதமான படைப்பு, இலக்கியம். இலக்கியங்களில் பல வகைகள் உண்டு. ஓர் இலக்கியத்தை சிறப்பாக வெளிப்படுத்த ஆசிரியரால் கையாளப்படும் நெறிமுறைகள் உத்திகள் ஆகும். ஆசிரியர்கள் தங்கள் கருத்துக்கு வலுசேர்ப்பதற்காகக்

கையாளப்படும் இலக்கியக் கூறுகளில் ஒன்று உத்தி. இதனைக் கையாளும் முறை ஆசிரியருக்கு ஆசிரியர் மாறுபடும்.

ஒவ்வொரு காலகட்டத்திற்கும் ஏற்ப கவிதை, தன்னை புதுப்பித்துக் கொண்டே இருக்கிறது. அதேபோல் உத்திகளும் மாறிக்கொண்டே இருக்கிறது. இதன் மூலம் புதிய பரிமாணத்தை கவிதை அடைகிறது.

சங்க கால இலக்கியங்களில் உருவகம், உவமை, உள்ளுறை, இறைச்சி என்றும், அதன் பின்பு மரபுக்கவிதையில் சற்று மாற்றமடைந்து எதுகை, மோனை, அணி, பாவகை, சந்தம் என்றும் இப்போது புதுக்கவிதையில் படிமம், குறியீடு, அங்கதம், இருண்மை, முரண், தொன்மம் என உத்திகள் பல பரிமாண வளர்ச்சி அடைந்துள்ளன.

சமகாலத்தில் புதுக்கவிதை ஒருபடி வளர்ந்து ஹைக்கூ வரை வளர்ந்துள்ளது. மக்களின் மனதைக் கவரவும், அறிந்து கொள்ளவும் புதுக்கவிதை வழிவகுக்கிறது.

ஒவ்வொரு கவிஞர்களும், ஒவ்வொரு விதமான உத்திகளை கையாண்டுள்ளார்கள். சில கவிஞர்கள் தங்களது கருத்தை மறைமுகமாகச் சொல்ல வேண்டிய நிலையில் இருண்மை (அ) புதிர்நிலை என்ற உத்தியினைக் கையாளுகின்றனர். புதுக்கவிதை பெரிதும் வளர, கவிஞர்கள் மட்டுமன்றி உத்திகளும் பெரும் பங்கு பெறுகிறது.

புதுக்கவிதையின் உத்திகள் படிமம், குறியீடு முதலியவற்றில் இருந்து நாட்டுப்புறப் பேச்சு வழக்கு, இருபொருள் தரும் கவிதை என மாற்றமடைந்து வருகிறது. இதன்மூலம் பல கவிஞர்கள் தனது வட்டார வழக்கையும், சொல்லாட்சியையும் பயன்படுத்த எளிமையாக இருக்கிறது.

புதுக்கவிதையில் உத்திகளைப் பயன்படுத்த முக்கியமான காரணம் அரசியல், சாதி, மதம், பொருளாதாரப்பிரச்சினை பற்றி எளிமையாக எடுத்துரைப்பதற்காக ஆகும். புதுக்கவிதை ஒவ்வொரு முறையும் மாற்றமடையும் பொழுது புதியதொரு உத்தி முறையும் பிறக்கிறது. புதுக்கவிதையில் உத்திமுறைகள் அனைத்தையுமே ஒரு கவிஞன் தன்னுடைய கவிதையில் பயன்படுத்தி இருக்க வேண்டும் என்கிற கட்டாயம் இல்லை.

அங்கதம்

அங்கதம் என்பது கேலி, கிண்டல், நகைச்சுவை, துணுக்கு குறிக்கும் சொல்லாகும். அதாவது, அங்கதம் என்பது நகைச்சுவையும், புலமை நுட்பமும், திறனாய்வு நோக்கும் கொண்ட ஓர் இலக்கிய உத்தி. இது மக்கட் சமுதாய மேம்பாட்டை அடிப்படையாகக் கொண்டது. என்று ஆங்கில இலக்கியக் கையேடு ஒன்று வரையறுத்துக் கூறுகிறது.

அங்கதம் என்பது தீங்கையும் அறிவின்மையையும் கண்டனம் செய்யும் பாட்டு என்பார் டாக்டர் சான்சன்.[1] தனிப்பட்ட மனிதனின் குறையையோ, ஒரு சமுதாயத்தின் குறையையோ, ஒரு இயக்கத்தின் குறையையோ குறிப்பாகவோ வெளிப்படையாகவோ சுட்டிக்காட்டுவது அங்கதம் என்று பிரிட்டானிகா கலைக்களஞ்சியம் காட்டுகிறது.[2]

அணியிலக்கண நூலார் அங்கதத்தினை அணி வகைப் பற்றி நேரடியாகக் குறிப்பிடவில்லை. இருந்தாலும் இலேசவணி, மாறுபடுபுகழ் நிலையணி என்னும், அணிகளில் விளக்கம் அங்கத்தின் உத்திக்கு பொருத்தமாக உள்ளது. தண்டியாசிரியர் இலேசவணியின் உட்பிரிவுகளை விளக்கும் போது,

புகழ்வது போலப் பழித்திறம் புனைதலும்
பழிப்பது போலப் புகழ்புலப் படுத்தலும்[3]

என்பார். இதில் புகழ்வது போலப் பழித்தல் என்பது அங்கத இலக்கணம் ஆகும்.

புதினம், சிறுகதை, நாடகம் போன்ற இலக்கியங்களில் அங்கதம் பேசப்பட்டாலும், புதுக்கவிதையில் காணப்படும் அங்கத அமைப்பு மிகுந்த தாக்கத்தைத் தந்தது. புதுக்கவிதைகளில் கருத்தை உணர்த்தும் உத்தி முறைகளில் அங்கதமும் ஒன்றாகும். சமூக, அரசியல், சாதி, மதம் விமர்சனத்தில் உள்ள பிரச்சினைக்கு புதுக்கவிதையில் பெரும் ஆயுதம் அங்கதம் உத்தி தான். பெரும்பாலும் அங்கதம் என்பது பழிப்புரை, நையாண்டி ஆகியவற்றைக் குறிப்பது. இருந்தாலும் பிறரது குறைகளைச் சுட்டிக்காட்டித் திருத்தும் நோக்கம் கொண்டது.

அரசாங்கம்

சங்க இலக்கியத்தில் மோசிகீரனார் பற்றி கூறும் செய்தியை,

அறியாது ஏறிய என்னைத் தெறுவர
இருபாற் படுக்கு நின் வாள்வாய் ஒழித்ததை,

*அதூஉம் சாலும் நற்றமிழ் முழுது அறிதல்*
*அதனொடும் அமையாது அணுக வந்து நின்*
*மதனுடை முழவுத்தோள் ஓச்சித் தன்னென*
*வீசி யோயே வியலிடம் கமழ்*[4]

*இப்பாடலின் மூலம் அறியலாம். அதாவது 'தோழர் மோசிகீரனார்' என்னும் கவிதையில், அலுவகத்திலோ தொழிற்சாலையிலோ பணிபுரியும் ஒருவன், தொழிற்சங்க இயக்கத்தைச் சேர்ந்தவன், மோசிகீரனாரைத் தனது தோழனாக கருதி விளிக்கிறான். மோசிகீரனாரைப் பற்றியோ அவரது சங்கக் கவிதைகளைப் பற்றியோ அவருக்கு ஒன்றும் தெரியாது. இருப்பினும் அவருக்கு அவர் மீது அளவு கடந்த அன்பு தோன்றிவிட்டதன். காரணத்தை ஞானக்கூத்தன் உரைக்கிறார்.*

*மோசிகீரா*
*மகிழ்ச்சியினால்*
*மரியாதையை நான்*
*குறைத்ததற்கு*
*மன்னித்தருள வேண்டும் நீ*
*… … … … … … … … …*
*அரசாங்கத்துக் கட்டிடத்தில்*
*தூக்கம் போட்ட முதல்மனிதன்*
*நீதான் என்னும் காரணத்தால் (ஞானக்கூத்தன் கவிதை. ப.-52 )*

*மேற்கண்ட கவிதையில், நீண்டதூரம் நடந்துவந்த களைப்பினால் முரசுகட்டிலில் மீதேறி துயில் கொண்டுவிட்ட புலவர் மோசிகீரனார். இவர் புலவராயிற்றே அடடா என அவருக்கு அருகே நின்று தூக்கம் கலைந்துவிடாமல் கவரி வீசிய மன்னரின் பெருந்தன்மையைப் பற்றி ஏதாவது சொல்லப் போகிறாரோ என்று தேடினால் அதற்கு மேல் அவர் எழுதவில்லை. ஞானக்கூத்தன் பாடவந்தது, அன்று மோசிகீரனார் தொடங்கி வைத்த பழக்கத்தையே இன்னும் அரசாங்கத்தின் கீழ் வேலை செய்யும் அதிகாரிகள் கடைப்பிடித்து வருகிறார்கள். அதாவது தொழிற்சங்கவாதிகளாக இருந்துக் கொண்டு, வேலை செய்யாமல் ஏமாற்ற நினைக்கும் அலுவலர்களின் தவறுகளைச் சுட்டிக்காட்டும் விதமாக இக்கவிதை அமைகிறது.*

*குழந்தைப் பருவம்*

*ஞானக்கூத்தன் கவிதைகளில் அப்படி என்ன விசேஷம்? கவிதையில் அவர் கையாளும் மொழி. வாசகனைப் பிடித்து இழுக்கும் வித்தியாசமான அம்சம். இது அவர் கவிதைகளை மற்றவர்களிடமிருந்து வேறு படுத்துகிறார். உதாரணமாக, சைக்கிள் கமலம் என்னும் கவிதையில், கமலம் என்னும் பெண் எப்படிச் சைக்கிள் ஓட்ட கற்றுக்கொள்கிறாள் என்பதை நகைச்சுவையாக்குகிறார்.*

*வழியில் மாடுகள் எதிர்ப்பட்டாலும்*
*வழியில் குழந்தைகள் எதிர்ப்பட்டாலும்*
*இறங்கிக் கொள்வாள் உடனடியாக,*
*குழந்தையும் மாடும் எதிர்ப்படா வழிகள்*
*எனக்குத் தெரிந்து ஊரிலே இல்லை (ஞானக்கூத்தன் கவிதைகள். ப.-63)*

*என்பதில், சிறு வயதில் சைக்கிள் ஓட்டி பழகிய நாட்களையும், சைக்கிள் மீதான சித்திரிப்பையும் கண்முன் காட்சிப்படுத்திய கவிதையை வாசித்து முடிக்கையில் நினைவுகளை மீட்டி விட்டு, வாய்விட்டு சிரிக்க வைத்து விடும். பொருள் மீது அதீத அன்பு செலுத்தும் மனபான்மையானது யானது (Fetish ist tendency) இங்கு அங்கத்துடன் சொல்லப்படுகிறது.*

*மூடநம்பிக்கை*

*தொலைக்காட்டிக் கல் என்பதும் நல்ல அங்கதச் சுவைமிகுந்த கவிதை,*

*காட்டுச் செடிகள் நித்ய பூஜை செய்யக்*
*குன்றிமணிகள் கம்பளம் நிரப்பக்*
*களாப்பழங்கள் நிவேதனமாக*
*சவுக்கைத் தோப்பின் மந்திரம் கேட்டு*
*எழுந்தருளியுள்ள மைக்கல் தெய்வமே*

நான்கு வேண்டாம் ஒரு கை உண்டா?
தலையும் இல்லை வாலும் இல்லை
இதுவும் தெய்வமா என்று
கேட்பவர் கேட்கட்டும் மைல் கல்லே
எனக்குக் கண்ணில் நீ மாகலிங்கம்
ஆனால் கொஞ்சம் சப்பட்டை (ஞானக்கூத்தன் கவிதைகள். ப. -201)

ஒருவன் மைகல்கல்லை வணங்குகிறான். பொதுவாக நாம் வணங்கும் தெய்வத்திற்கு பல கைகள் மற்றும் கால்களும் இருப்பதுதான் நம்பிக்கை. ஆனால் கவிஞர் பரவயில்லை நான்கு வேண்டாம் ஒரே ஒரு கை இருக்க கூடாதா? தலையும் இல்லை, காலும் இல்லை என்ன இது தெய்வம் என்று நகைச்சுவையோடு கேலி செய்கின்றார். மக்களிடையே காணப்படும் மூடநம்பிக்கை குறித்த கருத்தானது இக்கவிதையில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

வாக்குறுதி

ஞானக்கூத்தனின் ஆரம்பகாலக் கவிதைகளில் ஒன்று அம்மாவின் பொய்கள் என்பது. அது அவருக்குப் புகழையும் பெற்றுத் தந்தது. அக்கவிதையில்,

தாய்ப்பாலை நிறுத்தல் போலத்
தாய்ப்பொய்யை நிறுத்தலாமா? (ஞானக்கூத்தன் கவிதைகள். ப.- 12)

அம்மா தன் குழந்தையிடம் பொய் சொல்வது உண்மைதான். குழந்தையின் அழுகையை நிறுத்த, குழந்தையின் ஏக்கத்தை கலைக்க, குழந்தை நம்பவைக்க ஒவ்வொரு பொய்க்குப் பின்னாலும் ஒரு காரணத்தை அவள் மனம் அறிவும். அம்மாவின் மனதை பிரதிபலிக்கும் அதே நேரத்தில் கவிதை இறுதியில்,

அல்லது வயதானோர்க்குத்
தகுந்ததாய்ப் பொய்கள் சொல்லும்
பொறுப்பினி அரசாங்கத்தைச்
சார்ந்ததாய்க் கருதினாயா? (ஞானக்கூத்தன் கவிதைகள். ப. 12)

அரசாங்கம் சொல்லும்; வாக்குறுதிகளை பகடிச் செய்துள்ளது. அதாவது அரசாங்கம் என்னும் நிறுவனம், மக்கள் நன்மைக்காக ஏற்பட்டது, அதுவே பொய் வாக்குறுதி சொல்லி மக்களை ஏமாற்றும் காலத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம் என்பதை எடுத்துரைக்கிறார் கவிஞர்.

போலி எழுத்து

அதனால் என்ன என்னும் கவிதையானது இளைஞர்கள், மாணவர்கள் போன்றவர்களிடம் காணப்படும் போலியான எழுத்து(கவிதை) மோகத்தை பின்வருமாறு எடுத்துக்காட்கிறது.

நடிக்கச் சொன்னால் தயங்குகிறார்கள்
வரையச் சொன்னால் வராதென்கிறார்கள்
கவிதை வருமா என்றால் உடனே
எண்பது பக்க நோட்டுப் புத்தகம்
இரண்டை எடுத்து நீட்டுகிறார்கள் (ஞானக்கூத்தன் கவிதைகள். ப.275)

நடிக்கச் சொன்னால் எனக்கு தெரியாது, வரைய சொன்னால் வரையை தெரியாது கவிதைத் தெரியுமா என்றப்போது எண்பது பக்க நோட்டு புத்தகம் இரண்டை நீட்டுகிறார்கள். இந்த கவிதையில் இளைஞர்களிடம் காணப்படும் எழுத்தின் மீதுள்ள போலி ஆர்வத்தை கேலிச் செய்வதாக அமைகிறது.

அரசியல்

பரிசில் வாழ்க்கை என்றும் கவிதையில் அங்கதச் சுவையை மறக்கமுடியாத அனுபவம். பரிசில் வாழ்க்கை என்னும் சொல் சங்ககாலப் புலவர்கள் மேற்கொண்டிருந்த வாழ்க்கை முறையைக் குறிக்கும் சொல். அக்கம்பக்கம் உள்ள இடங்களுக்குச் சென்று சிற்றரசர்களையும், வள்ளல்களையும் சந்தித்து, புகழ்ந்து பாடி, அவர்கள் தரும் பரிசுகளைப் பெற்று வீட்டுக்குத் திரும்பும் வாழ்க்கை முறையை அது குறிக்கிறது. இன்று ஜனநாயக நாட்டில் அரசர்கள் இல்லை. வள்ளல் இல்லை. அப்படிப்பட்டவர்களைப் பாடிப் பாட்டெழுதும் கவிராயர்களும் இல்லை என

நாம் நினைத்துக்கொள்கிறோம். ஆனால் வேறு வடிவங்களில் அவர்கள் இன்னும் இருக்கிறார்கள் என்று கவிதையால் சுட்டிக்காட்டுகிறார் ஞானக்கூத்தன்.

நின் நயந்து உறைநர்க்கும், நீ நயந்து உறைநர்க்கும்
பன்மாண் கற்பின்நின் கிளைமுத லோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங்குறி எதிர்ப்பை நல்யோரிக்கும்
இன்னோர்க்கம் என்னாது, என்னோடும் சூழாது
வல்லாங்கு வாழ்தும் என்னாது, நீயும்
எல்லார்க்கும் கொடுமதி[5]

அதாவது, சங்காலத்தில் இருந்த பரிசில் வாழ்க்கைப்பற்றி புறநானுறு பாடலில் நயம்பட எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இக்கால இலக்கியத்தில் கவிஞர் ஞானக்கூத்தன் அவர்கள் வேறுப்படுத்தி வடிமைத்தள்ளார்.

வாரத்தில் ஒன்றிரண்டு வெளியூர்க் கூட்டம்
வரப்பார்க்கும் மணியார்டர் மாலை துண்டு
காரத்தில் பேசத் துப்பாக்கிச் சூடு
கல்பிறந்த காலத்தில் பிறந்தோர் தம்மை
நேரத்தில் களிப்பூட்ட அகநானூறு
நெய்யாற்றில் பாலாற்றில் பேசிப் பார்த்த
தீரத்தில் தெரிந்தெடுத்த நகைத்துணுக்கு
தமிழர்க்கு வேறென்ன கொடுக்கவேண்டும்
வளம்திரும்ப வேண்டுமெனில் இவருக்கான
பேய்ச்சுரைக்காய் சின்னத்தை மறவோம் என்றார்
பெரியதொரு மாலையிட்டு வணக்கம் போட்டார்

(ஞானக்கூத்தன்கவிதைகள்.ப.40)

அதாவது, ஆட்சி புரிகிறவர்களைத் தேர்ந்தெடுக்கும் வாக்குச்சீட்டையும் ஆதரவுக்கரத்தையும் கொண்ட பொதுமக்களே இந்நாட்டு அரசர்கள். தம் தலைவனைத் தீர்மானிக்கும் அரசர்கள். அவர்கள் வசமிருக்கும் வாக்குச் சீட்டுகளும் ஆதரவு மனநிலையும் மாபெரும் பரிசில்கள். அதிகாரத்தை அளிக்கக்கூடிய பரிசில்கள். எளிய பேச்சாளனாக மேடை ஏறும் ஒருவனுடைய வாய்ஜாலத்தில் மக்கள் வசப்பட்டுவிடுகிறார்கள். பேச்சாளன் மெல்லமெல்ல தலைவனாகிறான். பட்டம் சூட்டிக்கொள்கிறான். அமைச்சர் பதவி அவனுக்குக் காத்திருக்கிறது. அதிகாரத்தை நோக்கிய பயணத்தில் முடிவே இன்றிப் பயணம் செய்கிறார்கள் மனிதர்கள். இக்கவிதையில் அரசியல்வாதியின் பேச்சுத்தொனியையும், பேச்சின் விளைவுனவையும் எடுத்துரைக்கப்படுகிறது.

முடிவுரை

கவிதை என்பது கலையாகும். பிரச்சினைகள் மிகுந்த இன்றைய நிலையிலிருந்து மானுடத்தைச் சிதைத்து போகாமல் மீட்டுருவாக்கம் செய்கின்ற அற்புத சக்தி கலையினுடையது. அதனோடு தொடர்புடைய கவிதையினுடையது. நவீனக் கவிதைகளில் தனது முத்திரைப் பதித்தவர் ஞானக்கூத்தன். இவரின் படைப்புகளில் ஏராளமான உத்திகள் காணப்பட்டாலும், அங்கதம் மட்டும் தலைமையான மற்றும் சக்திவாய்ந்த ஆயுதமாகச் செயல்படுகிறது. தனிமனித சமுதாய, அரசியல் விமர்சனங்களில் அக்கறை கொண்டுள்ள ஞானக்கூத்தன் தம் படைப்புகளில் அங்கதக் கவிதைகளை மிகுதியாகப் படைத்துள்ளார். அவற்றின் மூலமாகத் தான் வாழும் காலத்தைப் பற்றிய தமது எண்ணங்களை வெளிப்படுத்தியுள்ளதையும், பல்வேறு தவறுகளைச் சுட்டிக்காட்டுவதையும் அத்தவறுகள் நீங்கித் தமிழ்ச் சமூகமமானது மேம்படவேண்டும் என்ற கவிஞரது எண்ணத்தையும் அவரது கவிதைப் படைப்புகள் புலப்படுத்தி நிற்கின்றன என்பதையும் தெளிவாக உணரலாம்.

தொகுப்புரை

- அங்கதம் என்பது புகழ்வது போல் பழிப்பது, பழிப்பது போல் புகழ்வது ஆகும்.
- உத்திகளைப் பயன்படுத்தும் போது அழகியலைக் காட்சிப்படுத்தியும், உருவகப்படுத்தியும் வெளிக்கொணர முடியும்.

- இலக்கியங்களில் உரைக்கப்படும் உத்திகளும், புதுக்கவிதைகளில் பயன்படும் உத்திகளும் வேறுப்பட்டதாகும். இறுதியில் இரண்டும் அழகியல் நோக்குடையதே.
- சமூகம், அரசியல், சாதி, மதம் என விமர்சனத்தில் உள்ள பிரச்சினைக்கு புதுக்கவிதையில் பெரும் ஆயுதம் அங்கதம் உத்தி தான்.
- ஞானக்கூத்தன் கவிதைகளில் மேலோட்டமாகப் பார்ப்பதற்கு எளிமையாகத் தோற்றம் கொண்டாலும் மிகவும் ஆழம் மிக்கவையாக அமைந்தது. அங்கதம் என்று சொல்லப்படும் விஷயம் அவரது கவிதையில் புதிய உருவத்தை மேற்கொண்டது. அதுவரை தமிழ்க்கவிதை கண்டிராத தெருக்காட்சிகள், புதிய கவிதை அனுபவங்களை வாசகருக்குத் தருகிறது.
- ஞானக்கூத்தன் கவிதைகளில் அரசியல் மற்றும் சமுதாய பற்றிய கருத்துகளை வெளிப்படுத்த அங்கத உத்தியை பயன்படுத்தியுள்ளார்.
- அரசியல், அரசாங்கம், அரசியல்;வாதி செய்யும் தவறுகளை சூட்டிக்காட்டும் வகையில் கவிதைகள் உள்ளது.
- இது சமூக மீதுள்ள கூடுதல் கவனத்தை வெளிப்படுத்தும் அனுபங்களையும் கவிதையில் வெளிப்படுத்துள்ளார்.

சான்றெண் விளக்கம்

1. ஏ.ராஜசேகர், அழகியல் மரபும் சில கோட்பாடுகளும், சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், பக்க எண் -131-141,
2. பிரிட்டானிகா தகவல் களஞ்சியம்,ப.16.
3. முனைவர்.ச.திருஞானசமந்தம், தண்டியலங்காரம் தெளிவுரை. செய்யுள்:66
4. புலியூர் கேசிகன், புறநானூறு தெளிவுரை, பா.எண்.96:10-15
5. மேலது, ப.எண்,56

துணை நின்ற நூல்கள்


1. பதிப்பாசிரியர் திவாகர் ரங்கநாதன் (2019), ஞானக்கூத்தன் கவிதைகள் முழுத் தொகுப்பு, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில். இந்தியா.
2. ஏ.ராஜசேகர் (2022), அழகியல் மரபும் சில கோட்பாடுகளும், சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், தொகுதி-4, பக்க எண் -131-141,
3. முனைவர்.ச.திருஞானசமந்தம் (2016), தண்டியலங்காரம் தெளிவுரை, கதிர் பதிப்பகம், திருவையாறு.
4. பிரிட்டானிகா தகவல் களஞ்சியம்(2012), விகடன் வெளியீடு, சென்னை.
5. புலியூர் கேசிகன் (2021), புறநானூறு தெளிவுரை, சரண் புக்ஸ் பதிப்பகம், சென்னை. இந்தியா.


********* ********* ********** ********* ********* ********** ********** **********